அசல்

✓ 16.1.22 வா.தி. மாசிலாமணி

(ம)

அசல்-1 நகல்-1

உ

சிவமயம்.

வாலாஜாபாத்,

எண் 311

வாலாஜாபாத்

தேதி 16.1.22

# இந்துமத பாடசாலை.

இப்பாடசாலை 1916௵ செப்டம்பர்மீ 4உ ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் சபையாரால் தாபிக்கப்பட்டு அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (1) ஆனரபில் சர். P. தியாகராய செட்டியார் B.A., அவர்கள், (2) குளம்பேடு ஜமீன்தார் திவான்பகதூர் C. அருணாசல முதலியார் அவர்கள், (3) ராவ்பகதூர் S. இரத்தினவேலு செட்டியார் அவர்கள், (4) ஆனரபில் W. விஜயராகவ முதலியார் B.A., அவர்கள், (5) ராவ்சாகேப் M. வெங்கட்ராகவலு ரெட்டியார் அவர்கள், (6) செய்யூர் ஜமீன்தார் C. முத்தையா முதலியார் B.A., அவர்கள், 7 ஜில்லா நீதிபதி V. வேணுகோபால் செட்டியார் I.C.S., அவர்கள், (8) சப் கலெக்டர் A. துரைசாமி முதலியார் B.A., அவர்கள், (9) ஐக்கோர்ட் வக்கீல் S. வேணுகோபால் செட்டியார் B.A.,B.L., அவர்கள், (10) A. இராமசாமி முதலியார் B.A.,B.L., அவர்கள், முதலிய அறிஞர்கள் இப்பாடசாலையைப் பார்வையிட்டு நல்லபிப்பிராயம் கொடுத்திருக்கின்றனர். இதில் சமயக்கல்வி, நல்லொழுக்கம், கைத்தொழில் முதலியனவும் கற்பிக்கப்படுகின்றன.

## இப்பாடசாலையின் அங்கங்கள்.

### மாணவர் கல்வி அபிவிருத்தி சங்கம்.

சிறுவர்கட்குக் கல்வியில் ஊக்கம் பிறத்தற்கும், இலக்கணப் பிழையின்றிப் பேசும் பழக்கம் வாய்த்தற்கும் இக்கழகம் தாபிக்கப்பட்டது.

### மாணவர் வர்த்தக ஐக்கிய சங்கம்.

இச்சங்கம் பலர் ஒன்றுகூடி வர்த்தகம் செய்தலால் உண்டாகும் நன்மைகளைப் பிள்ளைகள் சிறு வயதிலேயே உணர்தல் வேண்டுமென்னும் விருப்பால் தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.

### ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் சபை.

இச்சபையின் நோக்கங்கள் :—

(1) தமிழ் மறை வளர்த்தல்
(2) ஆலயவழிபாடு செய்தல்
(3) சமய உண்மைகளைப் பலரும் அறியச் செய்தல்
(4) சிறுவர், சிறுமியர்கட்குச் சமயக் கல்வி கற்பித்தல்.

### ஞானசம்பந்த புத்தகசாலை.

இதில் காலை மாலை சபையின் அங்கத்தவரன்றிப் பிறரும்வந்து இலவசமாகப்படிக்கின்றனர். புத்தக விடயமாக அன்பர்கள் உதவி வேண்டப்படுகின்றது.

### வாகீச வாசகசாலை.

தேசபக்தன், திராவிடன், ஆனந்த போதினி, கலாசிந்தாமணி, குணபோதினி, சித்தாந்தம், சைவம் முதலிய பத்திரிகைகள் இவ்வாசக சாலைக்கு வரவழைக்கப்படுகின்றன. அங்கத்தவரன்றி மற்றையரும்வந்து இலவசமாக வாசிக்கின்றனர்.

### சுந்தரானந்த நிலயம்.

இதில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை நேரத்தில் பாடசாலை மாணவர்களன்றி வேறு சிறுவர்களும் ஒன்று சேர்ந்து இன்னிசையுடன் பாடப் பயில்கின்றனர்.

### குமாரசுவாமி பஞ்சம தரும பாடசாலை.

இது பஞ்சமர்களும் கல்வியில் தேறவேண்டுமென்றும் அவர்களும் இந்துமத உணர்ச்சி பெறவேண்டுமென்றும் எண்ணி ஏற்படுத்தப்பட்டது. அரசாங்கத்தாரால் அங்கீகாரம் பெற்றனது.

உ.

அன்பும் மாண்பும் துதைந்த ஐயர் அவர்கள்
தமிழ் மணக்கின்ற சேவடிகளுக்கு

பல பணிவு.

உலகமறிந்த தங்கள் தமிழ் மாண்பு மன்னர் மகனாராலும் அங்கீகரிக்கப்பட்டமை மிகுதியும் உவகை தருகிறது. தங்கம் எத்துணை ஆழத்திலும் மறைந்து கிடப்பினும் மக்களால் அறிந்தெடுக்கப்படுவதாக நிலமிசை திரட்டி வைத்த பொற்குவியல் பிறரால் அறியப்படுவது ஒருவிந்தையன்று. எனினும் மக்கள் கண்ணிழந்து கிடக்கும் இக்காலத்தில் தங்கள் தமிழ் நலன் இளவரசராலும் மதிக்கப் பெற்றமை பெரிதும் போற்றத்தக்க சிறப்புடைத்தாம் என்பதற்கென்ன ஐயம். இக்காலத்திலும், இத்தகைய பெருமை தங்கள் போன்றோர்க்கன்றி யார்க்கு வாய்க்கற்பாலதும்.

இவ்வின்பச்செய்தி எங்கள் உள்ளங்களில் நிகழ்த்திய அன்பு நிரம்பிய பணிவுகளைத் தங்கட்குத் தெரிவித்துக் கொள்ளுதலில் மிக்கக் களிப்படைகிறோம்.

இங்ஙனம்
தங்கள் பணிவு நிறைந்த
வா.தி. மாசிலாமணி
இந்துமத பாடசாலை
சிவபுரம்

COMMERCIAL PRESS, MADRAS

நகல்

(ல) ✓ 16.1.22 வா.தி. மாசிலாமணி

அசல் -1 நகல் -1

உ

எண் - 311 சிவமயம் வாலாஜாபாத்

16-1-22

வாலாஜாபாத்
இந்துமதபாடசாலை

அன்பும் மாண்பும் நிறைந்த ஐயர் அவர்கள்
தமிழ்மணிக்கும் சேவடிகளுக்கு

பலபணிவு.

உலகமறிந்த தங்கள் தமிழ் மாண்பு மன்னர் மகளிரானும் அங்கீகரிக்கப்பட்டமை மிகவும் உவகை தருகிறது. தங்கள் எத்துணையோ ஏடுகளில் மறைந்து கிடப்பனவும் மக்களாலறிந்தெடுக்கப்படுவதாக, நிலமிசை திரட்டவைத்த பொற்குவியல் போறால் அறியப்படுவது ஒருவேற்றுமையன்று. எனினும் மக்கள் கண்ணிழந்து கிடக்கும் இக்காலத்தில் தங்கள் தமிழ்நலன் இராசாங்கத்தாராலும் மதிக்கப்பெற்றமை பெரிதும் போற்றத்தக்க சிறப்புடைத்தும் என்பதற் கென்னையோ. இக்காலத்திலித்தகைய பெருமை தங்கள் போன்றோர்க்கன்றி யார்க்கு வாய்க்கற்பாலதும்

இவ்வின்ப செய்தி எங்கள் உள்ளங்களில் நிகழ்த்திய அன்பு [illegible] மிகப்பய பணிவு தலைத்தரும்பட. தெரிவித்துக்கொள்தலில் மிகக்களிப்படைகிறேம்

இங்ஙனம்
தங்கள் பணிவு நிறைந்த
வா.தி. மாசிலாமணி
இந்துமதபாடசாலை
சிவபுரம்

நகல்

ம ✓ 16.1.22 ஹாஜி. மாசிலாமணி

அசல்-1 நகல்-1

3

16-1-22

இந்துமதபாடசாலை

வாலாஜாபாத்

Copied

Copied in

த.க. VOL 'A'

P. 257-258.

இதற்கு [illegible] தனியே பாகத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

31

௪

16.1.22 ஓ.ரா.தி. மாசிலாமணி

அசல் -1 நகல் -1



௫

16.1.22 ஞா. தி. மாசிலாமணி

அகம் -1 நகம் -1

